## யூன்– 23 –- சனி

### புனித எயெல்ரடா

### ஆண்டவரே, வானங்கள் உம் வியத்தகு செயல்களைப் புகழ்கின்றன: திபா. 89:5

### முதல் வாசகம் : 2 குறிப்பேடு 24 : 17 – 25

யோயாதா இறந்தபின், அரசர் தம்மைப் பணிந்து நின்ற தலைவர்களின் சொற்களுக்கு இணங்கினார்.அதனால் அவர்கள் தங்கள் முன்னோர்களின் கடவுளான ஆண்டவரின் இல்லத்தைப் புறக்கணித்து, அசேராக் கம்பங்களையும், சிலைகளையும் வழிப்பட்டனர். அவர்கள் செய்த இப்பாவத்தின் பொருட்டு யூதாவின் மேலும் எருசலேமின் மேலும் இறைவன் கடுங்கோபம் கொண்டார்.அவர்கள் தம்மிடம் மீண்டும் வருவதற்கு ஆண்டவர் அவர்களிடம் இறைவாக்கினர்களை அனுப்பினார். அவர்களும் மக்களைக் கண்டித்தனர். ஆனால் அவர்கள் செவிகொடுக்கவில்லை.அப்போது கடவுளின் ஆவி குரு யோயாதாவின் மகன் செக்கரியாவின்மேல் இறங்கியது. அவர் மக்கள்முன் நின்று அவர்களை நோக்கி "இதோ, கடவுள் கூறுகிறார் ஆண்டவரின் கட்டளைகளை மீறுவதேன்? அதனால் நீங்கள் வாழ்வில் முன்னேற மாட்டீர்களே! ஆண்டவரை நீங்கள் புறக்கணித்ததால், அவரும் உங்களைப் புறக்கணித்துள்ளார்" என்றுகூறினார்.அவர்கள் அவருக்கு எதிராக சதிசெய்து, அரசரின் ஆணைக்கேற்ப ஆண்டவரின் இல்லத்து மண்டபத்தில் அவரைக் கல்லால் எறிந்துகொன்றனர்.அவர் தந்தை யோயாதா காட்டிய பேரன்பை மறந்து, அரசர் யோவாசு செக்கரியாவைக் கொல்லச்செய்தார். அவர் இறக்கும்போது, "ஆண்டவர் இதைக்கண்டு பழிவாங்குவாராக!" என்றார்.அடுத்த ஆண்டு, சிரியாப் படையினர் அவருக்கு எதிராக வந்து, யூதாவிலும் எருசலேமிலும் புகுந்து மக்களின் எல்லாத் தலைவர்களையும் கொன்றழித்தனர். கொள்ளைப் பொருள்கள் அனைத்தையும் தமஸ்கு மன்னனிடம் அனுப்பி வைத்தனர்.சிரியர் மிகச் சிறு படையுடன்தான் வந்தனர் இருப்பினும், தங்கள் முன்னோரின் கடவுளான ஆண்டவரை இஸ்ரயேலர் புறக்கணித்ததால், ஆண்டவர் அவர்களது பெரும் படையைச் சிரியரின் கையில் ஒப்புவித்தார். அவர்கள் யோவாசைத் தண்டித்தனர்.கடும் காயமுற்ற நிலையில் யோவாசைச் சிரியர் விட்டுச்சென்றனர் அவருடைய அலுவலர்களோ அவருக்கெதிராகச் சதிசெய்து, குரு யோயாதாவின் மகனின் இரத்தப்பழியின் பொருட்டு அவரது படுக்கையிலேயே அவரைக் கொன்றனர். தாவீதின் நகரத்தில் அவர் சடலத்தை அடக்கம் செய்தனர் ஆனால் அரசர்களின் கல்லறையில் அவரை அடக்கம் செய்யவில்லை.

**பதில்பாடல் :** எனது பேரன்பு என்றும் நிலைக்கச் செய்வேன்.

### நற்செய்தி : மத்தேயு 6 : 24 - 34

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.ஆகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன் உயிர் வாழ எதை உண்பது, எதைக்குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். உணவை விட உயிரும் உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? வானத்துப் பறவைகளை நோக்குங்கள் அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா!கவலைப் படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒருமுழம் கூட்ட முடியும்?உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டுமலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக்கவனியுங்கள் அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. ஆனால் சாலமோன் கூடத் தம்மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப்போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன். நம்பிக்கை குன்றியவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும் காட்டுப்புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணிசெய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் அதிகமாகச் செய்ய மாட்டாரா? ஆகவே, எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர் உங்களுக்கு இவை யாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளையக் கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்“என்றார்.

**தியானம்:** இன்றையதியானமானது நாங்கள் இறையாட்சிக்கு செல்வதற்கும், மற்றவர்களை தயார்படுத்தவும் அதற்கு ஏற்புடையவற்றை செய்யும்படியம் அவ்வேளையில் அதற்கு தடையாக தோல்விகள், ஏமாற்றங்கள், அவமானங்கள், பசி, பட்டினி எவ்வாறானவை வந்தாலும் கவலைப்படவேண்டாம். ஏனெனில் நான் என்றும் உங்கள் கூடவே இருக்கின்றேன் என்பதை வெளிப்படுத்துகின்றது. நாங்கள் வேலைக்கு சென்று உழைத்தால் தான் எனது குடும்பத்தை பார்க்கமுடியும், எனது தேவைகள் யாவற்றையும் நிறைவேற்ற முடியும் என்று நேரம், காலம் பார்க்காமல் உழைத்து இறைவனுக்கு முன்னுரிமை கொடுக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மிடம் காணப்படும் போட்டி, பொறாமை, இவையே இவற்றிற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. ஏனெனில் ஒருவர் ஒருவீட்டைக் கட்டினால் அவரைவிட மேலதிகமான முறையில் வீட்டைக்கட்ட வேண்டும், நல்லவாகனம் வைத்திருந்தால் அவர் வைத்திருக்கும் வாகனத்தைவிட பெறுமதிமிக்கதான வாகனத்தை வைத் திருக்கவேண்டும் என்ற மனப்பாங்குடன் வாழ்கின்றோம். இதனால் நாம் இறைவனின் அன்பிலிருந்து விலகிவிடுகிறோம். எனவே நாங்கள் இவ்வாறாக வாழாமல் எவற்றிறிகும் கவலைப்படாமல் முதலில் இறைவனைத் தேடுவோம், வானத்துப் பறவைகளைப் படைத்து அவற்றிற்கு தேவையானயாவற்றையும் கொடுத்து பாதுகாத்த இறைவன், அவற்றைவிட மேலாகப் படைக்கப்பட்ட எம்மை எவ்வளவு அதிகமாக பாதுகாத்து வழிநடத்துவார். “எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம் என்று கவலைகொள்ளாதீர்கள்” (மத்.6:31) எனவே யாவற்றிற்கும் கவலைப்படாமல் எவ்வாறானநிலையிலும் முதலில் இறைவனுக்கு முன்னுரிமை கொடுத்து, தேவையானநேரத்தில் எமக்குத் தேவையானயாவற்றையும் இறைவன் தருவார் என்று கவலையின்றி நம்பிக்கையுடன் வாழ்வோம்.